# தியாக தீபம்

# திலீபன்



15ம் ஆண்டு நினைவாக.....

தியாக தீபம்

# லெப் கேணல் திலீபன்

## 15ம் ஆண்டு நினைவாக....



மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்

-தியாகி திலீபன்-

ஈழத்தமிழ் தேசிய இனம் காலந் தோறும் பேரினவாதிகளால் கட்டவிழ்த்துவிடப்பட்ட இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மட்டுமன்றி தமது வரலாற்று ரீதியான, ஆத்மார்ந்த ரீதியான அபிலாசைகளுக்காகவும் குரல் கொடுத்து வந்துள்ளது. இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மை இனத்தவர் அல்ல. அவர்கள் தனியான தேசிய இனத்தவர்கள். முன்னாள் ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் தனியான தேசிய இனமொன்றுக்கு வகுத்த வரைவிலக்கணப்படி தேவையான பரிமாணங்கள் முழுமையினையும் ஈழத் தமிழர்கள் கொண்டிருக்கின்றனர்.

வரலாற்றுச் சிறப்புடைய தாயகப் பிரதேசம் தனியான வரலாறு, மொழிச்சிறப்பு, தனித்துவமான பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றுடன் அவர்களுக்கே உரித்தான பொருளாதார வளங்களையும் இயல்பாகத் தமிழ் பேசும் மக்கள் கொண்டிருக்கின்றனர். இத் தேசியத் தன்மையின் முழுமையை அவாவியே தமிழ்மக்களின் கோரிக்கைகள் காலம் தோறும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன.

இந்த நியாயபூர்வமான கோரிக்கைகள் தென்னிலங்கையில் ஆட்சிப் பீடமேறிய சிங்கள அரசுகளால் உதாசீனம் செய்யப்பட்டன. மேலும் ஒருபடி போய் அதனை அவாவிய தமிழினம் இராணுவ ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த இராணுவ ஒடுக்குமுறை என்பது உலகமெங்கும் ஆக்கிரமிப்பாளர்கள் மேற்கொள்ளும் சகல வன்முறை வடிவங்களையும் உள்வாங்கிக் கொண்ட தாகவிருந்தது.

நியாய பூர்வமான, உரிமைக்கான வேண்டுதல்கள் இராணுவ ரீதியாக நசுக்கப்படும்போது அதற்கான பதிலளிப்பு ஆயுதரீதியானதாக மாறும் என்பது நியதி. இதுவே இயங்கியல் விதியுமாகும். ஈழத் தமிழர்களாகிய எமது போராட்டம் இந்த இயங்கியல் விதிக்குட்பட்டமை தவிர்க்க முடியாததே.

ஈழத்தமிழினத்தின் விடுதலைக்காக இந்த விதிக்குட்பட்டு ஆயுதப் போராட்டத்தை பல அமைப்புக்கள் ஆரம்பித்தன. அவற்றில் பல காலவோட்டத்தில் பொது இலட்சியத்தைக் கைவிட்டு சுயலாப

நோக்கினைக் கைக்கொள்ளத்தொடங்கின. அதனோடு மட்டுமல்லாது பொது இலட்சியத்தை உறுதியாக முன்னெடுத்தவர்கள் மீது முட்டுக்கட்டைகளையும் ஏற்படுத்தின. இவற்றுக்கு மத்தியில் தீர்க்கமான முறையில் தமிழர் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த சக்தியாக விடுதலைப் புலிகளே விளங்கினர்.

தமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு வழியாக இருந்த ஆயுதப்போரை விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கில் படிப்படியாக தீவிரப்படுத்தி வந்தனர். தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலைகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். சிங்கள ஆட்சியாளர்களால் புதிது புதிதாக மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு வந்தனர்.

விடுதலைப்புலிகளின் முதலாம் கட்ட ஈழப்போர் காலத்தில் ஒரு திருப்பு முனையாக 1987 யூலை மாதம் அமைந்தது. வடமராட்சியில் “ஒப்ரேசன் லிபரேசன்” இராணுவ நடவடிக்

கையை சிறிலங்கா இராணுவம் மேற் கொண்டது. அப்போது சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த லலித் அத்துலத்முதலி "நாங்கள் தீவிரவாதிகளைப் பேச்சுக்கு அழைத்த காலம் போய்விட்டது. இப்போது போருக்கு வாருங்கள் என அவர்களை அறைகூவி அழைக்கிறோம்" என தமிழ் மக்களை நோக்கிச் சவால் விட்டார். இந்தச் சவாலை "கரும்புலி கப்டன் மில்லர்" ஏற்றுக் கொண்டார். தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் வகுத்த திட்டத்தை நெறிப் படுத்தி தன்னை அழித்துப் படைமுகாம்களை அழிக்கும் முதல் நடவடிக்கையை நிகழ்த் தினார். இதன் தாக்கம் சிறிலங்கா இராணுவத் திற்கு மரண அடியாக விழுந்தபோது ஆட்சிப்பீடம் கதிகலங்கிப் போனது. அதன்பின் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது இராஜதந்திர முயற்சியின் ஒரு காய் நகர்த்தலாக இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். இலங்கை - இந்திய ஒப்பந்தமான இது தமிழ் மக்களின் பாதுகாப்பு, தேசியம், இறைமை என்பவற்றை உறுதிப்படுத்தும் என அப்போதைய ராஜீவ் காந்தி அரசினால் உத்தரவாதம் செய்யப்

பட்டது.

அமைதி காக்கும் நோக்கம் என்ற போர்வையில் இந்திய இராணுவம் ஈழமண் ணில் கால் பதித்தது. ஒட்டு மொத்த ஈழத் தமிழினத்தினதும் பாதுகாப்பை தாம் பொறுப் பேற்றுக் கொண்டதாகக் கூறிய இந்திய அரசு விடுதலைப்புலிகள் வசம் உள்ள ஆயுதங்களை ஒப்படைக்குமாறு கோரியது. அதன்படி விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்த போதும் சிறிலங்காஅரசு செய்துகொண்ட ஒப்பந்தத்தை மதிக்கவில்லை. இந்திய இராணுவமும் அதனைச் செயற் படுத்தவில்லை.

ஒப்பந்தம் மீறப்பட்டு தமிழர்களுக் குரியன வழங்கப்படாதபோது புலிகள் தமது போரை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. மீண்டும் தமது கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியிலான போரை முன்னெடுக்கத் தலைப்பட்டனர். காந்திய வழியிலான விடுதலைப்புலிகளின் முதலாவது சாத்வீகப்போர் முன்னெடுக்கப் பட்டது.

இதனை விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

லெப்.கேணல் திலீபன் உண்ணாவிரதப் போராக முன்னெடுத்தார்.

1985ம் ஆண்டு யாழ் குடாநாட்டில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ த்தினரின் பல முகாம்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையான போராளிகளுக்கு மத்தியில் ஆக்கிரமிப்பின் குறியீடுகளாய் இருந்தன. மிகக் குறைந்தளவிலான ஆயுதங்களையும் கொண்டு தளபதி கேணல் கிட்டு முகாம்களைச் சூழ வியூகங்களை அமைத்து குடாநாட்டைப் பூரண கட்டுப் பாட்டினுள் வைத்திருந்தார். விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான போரிடும் திறன் நிலைநாட்டப்பட்ட இக்கால கட்டத்தில் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக லெப். கேணல் திலீபன் நியமிக்கப்பட்டிருந்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தை 87ம் ஆண்டு ஆரம்பிக்கும் வரையில் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபனின் தனிப்பட்ட வாழ்வு முறை வித்தியாசமானதாகவே இருந்தது. திலீபன் தன் வாழ்வில் சராசரி இளைஞர்கள்

எல்வோருக்குமே உரிய குழந்தைப் பருவ வாழ்வைப் பெறவில்லை என்றே கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் ஊரெழு எனும் கிராமத்தைச் சேர்ந்த திலீபன் சிறு வயதிலேயே தாயை இழந்திருந்தான். பாடசாலை ஆசிரியரான தந்தை இராசை யாவிடம் இருந்து பூரண அன்பும், அரவணைப்பும் கிடைத்த போதும் தாயில்லாத பிள்ளைகள் எதிர்கொள்ள நேரிடுகின்ற இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்தான்.

தாயை இழந்தமையால் சிறுவயதில் தான்பட்ட துன்பங்களைப் பிற்காலத்தில் தாயகம் இழந்து தமிழர்கள் அனுபவிக்க நேரிடும் துன்ப துயரங்களோடு அவனால் ஒப்பிட்டுப் பார்க்க முடிந்தது. இது அவரது பேச்சிலும் எழுத்திலும் அதிகம் பிரதிபலித்தது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் திலீபன் தனது இடைநிலைக் கல்வியைப் பயின்ற காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களின் நட்பு கிடைத்தது. மாவீரர்களான பொன்னம்மான், ராதா போன்றவர்களின் நட்பு அவருக்குப் படிப் பறிவோடு பட்டறிவையும் பெற்றளித்தது.

வியட்நாம், கியூபா, எல்சல்வடோர் போன்ற நாடுகளின் விடுதலைப் போராட்டம் பற்றிய விடயங்களையும், பிடெல் கஸ்ட்ரோ, சேகுவரா, ஜெனரல் கியாப் போன்றவர்களின் நூல்களையும் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த நூல்களைப் படித்ததன் விளைவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கிய மறுமலர்ச்சிக்கழகமும் அங்கு வைக்கப் பட்டிருந்த நூற்றுக் கணக்கான விடுதலைப் போராட்டம் பற்றிய நூல்களும் ஆகும்.

அறிவுத்தேடல்களில் ஈடுபட்ட திலீபன் அதனைப் பாடமாகக் கொண்டு ஆக்கப்பணிகளிலும் ஈடுபட்டார். இந்த ஆக்கப்பணி என்பது மக்கள் மத்தியில் விடுதலை வேட்கையை முனைப்படுத்துவதற்கான செயற்பாட்டுத் தளமாக அமைந்தன.

க.பொ.த உயர்தரப்ரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தி பெற்ற திலீபன் மருத்துவபீடத்திற்கு தெரிவானார். பார்த்தீபனாக மருத்துவபீட மாணவனான காலப்பகுதியில் சிறிலங்கா அரசு தமிழ்மக்கள்

மீது தென்னிலங்கையில் கட்டவிழ்த்து விட்ட மற்றொரு இனக்கலவரம் (1983ல்) நிகழ்ந்தது. இக்காலப்பகுதியே அவனை விடுதலைப் புலியாக ஆக்கியது.

போர்ப்பயிற்சிகளை நிறைவு செய்து திலீபனாக வெளிவந்த அவர் வலிகாமத்தின் ஒரு பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டு வந்தார். அப்பணியில் அவர் காட்டிய திறமை, ஈடுபாடு, விசுவாசம் என்பனவற்றின் காரணமாக தலைமைப்பீடம் அவரை யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக நியமித்தது. 1985ம் ஆண்டு முதல் இப் பொறுப்பை வகிக்கத் தொடங்கினார்.

இக்காலப்பகுதியில் முகாம்களுக் குள் முடக்கப்பட்டிருந்த படையினர் ஆக்கிரமிப்புக் கான முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். ஆயினும் விடுதலைப் புலிகளால் அவ்வப்போது அவை முறியடிக் கப்பட்டன. இந்த முறியடிப்புச் சமர்களில் தளபதி கேணல் கிட்டுவுடன் திலீபனும் பங்கெடுத்தார். இத்தகைய ஒரு சமரில் வயிற்றில் அவர் விழுப்புண்பட நேர்ந்தது. அவரது சிறுகுடலின் ஒரு பகுதி சத்திர

சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. அதன் பின்பும் புதுவாழ்வு பெற்றது போல விடுதலைப்பணியில் முனைப்புடன் செயற்பட்டார்.

தமிழீழ தேசத்தின் உருவாக்க த்துக்கு உறுதுணையான உட்கட்டுமான திட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கினார்.. பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழ மாணவர் அமைப்பு, சுதந்திரப்பறவைகள் ரடோ (RADO) போன்ற அமைப்புக்கள் தாபிக்கப்பட்டன. இந்த அமைப்புக்கள் ஊடாக பிரதேச பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தார். சுதந்திரப் பறவைகள், மூலம் பெருமளவு மகளிர் விடுதலைப் போராட்டத்தினுள் உள்வாங் கப்பட்டனர். மாணவர்கள் தமிழீழ மாணவர் அமைப்பின் மூலம் விடுதலைப் போரா ட்டத்துக்கு தமது பங்களிப்பை வழங்கத் தலைப்பட்டனர்.

போராட்டத்தை மக்கள் மயப்படுத் துவதில் ஊடகங்கள் என்றுமே பங்களிப்புச் செய்து வருகின்றன. திலீபன் இதை விளங்கிக் கொண்டு ஊடக உருவாக்கங்

களை தமிழீழ மண்ணிற்கென்றே மேற்கொண்டார். அச்சு ஊடகங்கள் மட்டுமன்றி இலத்திரனியல் ஊடகங்களும் நிறுவப்பட்டன.

திலீபனின் அரசியல்பணி பல தளங்களிலும் விரிந்திருந்தது. 1987-07-05 அன்று முதல் கரும்புலித் தாக்குதலை நெல்லியடியில் கரும்புலி கப்டன் மில்லர் நிகழ்த்தியபோது மில்லரின் கடைசிப் பொழுதுவரை திலீபன் கூடவிருந்தார். மில்லரின் தாக்குதல் திலீபனுக்கு புதியதொரு திடசங்கற்பம் கொள்ளக் காரணமானது. மில்லரைப் போலவே தானும் போராட்ட வரலாற்றில் புது சகாப்தம் ஒன்றைப் படைக்க வேண்டும் என எண்ணிக் கொண்டார்.

விரைவிலேயே அப்படி ஒரு காலம் இந்திய இராணுவத் தலையீட்டின் வடிவில் கிடைத்தது. தமிழீழ மண்ணில் புதியதொரு போருக்கான வடிவை அவர் வடிவமிட்டார். தேசியத்தலைவருடன் வாதாடி அதற்கான அனுமதியையும் பெற்றார்.

இந்திய அமைதிப்படை மக்கள் எதிர்பார்ப்புக்களை காலில்போட்டு மிதித்தது.

தமிழீழ மண் சிங்களப் பேரினவாதப் பிடிக்குள் இந்தியாவின் அனுசரனையுடனேயே மாண்டு கொண்டிருந்த போதுதான் திலீபன் 1987.09.15 செவ்வாய்க்கிழமை காலை 9.55 மணியளவில் கீழ் வரும் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போரைத் தொடங்கினான்.

- **மீளக் குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.**
- **சிறைச் சாலையிலும் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட வேண்டும்.**
- **அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்.**
- **ஊர்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதம் யாவும் மீளப் பெறப்பட வேண்டும்.**
- **தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படும் முயற்சிகள் முற்றாக கைவிடப்பட வேண்டும்.**

இந்த ஐந்து அம்சக் கோரிக்கைகளும் மறுக்கப்படமுடியாத நியாயபூர்வமானவை என்பது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஏற்கனவே ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி சுதுமலைப் பிரகடனத்தில் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். **"போராட்ட வடிவங்கள் மாறலாம் ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது."** அதே இலட்சியத்தை நோக்கி திலீபன் மாறிய போராட்ட வடிவத்தைக் கையாண்டார்.

நீராகாரம் எதுவுமற்று காந்திய வழியால் காந்தி தேசத்துக்கு எதிராக ஆரம்பித்த போர் விரைவிலேயே வெகுஜனத் தன்மையைப்பெற்றுக் கொண்டது. திலீப னைப் போலவே குடும்பப் பெண்கள் உட்பட பலர் சாகும்வரையான உண்ணாவிரதப் போரை திலீபன் முன்வைத்த கோரிக்கை களை நிறைவேற்றக் கோரி ஆரம்பித்தார்கள். வல்வெட்டித்துறை, முல்லைத்தீவு, மாங் குளம், மட்டக்களப்பு என எங்கும் திலீபனுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போர்கள் மூண்டன.

இந்தத் தன்மையானது திலீபனால் முன்வைக்கப்பட்ட ஐந்தம்சக் கோரிக்கை களுக்கு வெகுஜனத் தளத்தை உருவாக்கியது.

போராட்ட இலட்சியத்தையும், அன்றைய காலகட்ட அரசியல் சூழ்நிலையையும் புதியதோர் போராட்டவடிவத்துக்கு ஊடாக இணைக்கின்ற மையப்புள்ளியாக திலீபன் தோற்றம் பெற்றார்.

நல்லூர் ஆலய வீதியில் அவன் நடாத்திய தியாக வேள்வியும் 26.09.87அன்று காலை 10.48 மணிக்கு அவன் எய்திய தியாக மரணமும் இளம் உள்ளங்களின் நாடி நரம்புகளில் உத்வேகத்தை ஊட்டின. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூடு திரையைக் கிழித்தெறிந்தன.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 04.08.87ல் சென்னை மெரினா கடற்கரையில் பேசும்போது குறிப்பிட்டதானது மேற்படி உடன்படிக்கைமூலம் இலங்கைத்தீவின் 1/3 நிலப்பரப்பு ஆள்புலமும், கடலில் 2/3 ஆள்புல நீர்ப்பரப்பும் இலங்கைத் தமிழர்களுக்குச் சொந்தமாகி விட்டது. இந்திய மாநில அரசுகள் ஒவ்வொன்றுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற சமதையான அதிகாரம்

இலங்கையின் வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னார். இந்த வார்த்தைகள் சர்வ தேசத்தில் மாயைத் தோற்றத்தை உருவாக்கியிருந்தன.

ஆனால் தர்க்கரீதியில் இதற்கு உட்பட்டதான கோரிக்கைகள் எதனையும் இந்திய அரசு நிறைவேற்றத் தவறியதால் திலீபன் ஈட்டிய தியாக மரணம் அந்த மாயத் தோற்றத்தை உடைத் தெறிந்தது.

திலீபனின் இந்த அகிம்சைப்போர் தமிழீழத்தின் வரலாற்றில் முதன்மையானதும் உச்சமானதுமாக அமைந்தது. பின்வந்த அகிம்சைப் போராட்டங்களுக்கும் வெகுஜன எழுச்சிகளுக்கும் வழிகாட்டியாய் அமைந்தது.

இன்று அரசியல்ரீதியில் பல வெற்றிகளை ஈட்டக் காரணமாகும் வெகுஜனப் போராட்டங்களுக்கும் திலீபனே வழிகாட்டியாய் இருந்தார் என்பதே உண்மையானது. அன்று திலீபனின் தியாக மரணத்தின் பின் போராட்டத்தைக் காப்பதற்கான போர் வெடித்தது. அதன்முடிவில்

இந்திய ஆக்கிரமிப்புப் படை வெளியேறியது.

முடிவில் லெப். கேணல் திலீபன் ஆரம்பித்த தியாக வேள்வியின்பின் நூற்றுக் கணக்கில் போராளிகள் களத்தில் வீரமரணம் அடைந்தனர். திலீபனின் ஆத்மீகப்பலத்திற்கு முன்னால் இந்திய இராணுவத்தின் பலம் தோற்றுப்போனமை வரலாயிற்று.

*******




# நித்திய ஜீவிதன்

நெஞ்சக்குள் உருவம் வரைந்து
இவனின் நினைவுக்குப் பூச்சொரிந்தபடி
மீதமாய் எத்தனைபேருளோம் இன்றும்.
இவன் கனவுக்கு நீரூற்றி
பூக்குமெனும் நம்பிக்கையுடன் எத்தனைபேர்?
காலக்காற்றின் சுழலில் அகப்பட்டு
திசைக்கொன்றாயினோம்.
நாட்களின் வேக நகர்வுக்கு
ஈடுகொடுக்க இயலாது
இன்று நேற்றயதை மறக்கும் இயல்பாயிற்று.
ஆயினும் எஞ்சியது இவன் நினைவொன்றேயென
உண்மையுரைப்போர் எத்தனை பேர்.
காலத்தின் கால்களில் எத்தனை வேகம்
எவர் தடுக்க இயலும்.
அது பாடிக்கொண்டு பறக்கின்றது.
இவனை இழந்தும் பதினைந்து வருடமாயிற்று
இத்தனை நீட்சியுள்ளும் இவன் வாழ்கின்றான்.
அடிக்கடி இவன் உச்சரிக்கப்படுகிறான்.
முன்னுதாரணமாக மொழியப்படுகிறான்.

ஆதிக்கச் சிலந்திகள் எம்மில் வலைபின்னும்
ஒவ்வொரு தடவையும்
ஆதர்ச ஒளியாக இவனே பிரகாசிக்கின்றான்.
வாழ்வின் இடையில் போனாலும்
ஜென்மத்தின் முழுமையும் இவன் சாவிலிருந்தது.
சாவு முடிவல்ல
அதன்பின்னே ஒருவனின் நித்திய ஜீவிதம்
ஆரம்பமாகிறது.
திலீபன் ஜீவிக்கின்றான்.
காலத்தின் எல்லைகளைக் கடந்து
இவன் நாமம் கடத்தப்படுகிறது.
எம் மண்ணின் பூக்களில்
பாடும் குயில்களின் பாடலில்
நல்லூர் மணியொலியில்
ஊரெழுவின் செம்மண் புழுதியில்
விடுதலைக்குக் கிளர்ந்தெழும் மனங்களில்
திலீபன் ஜீவிக்கின்றான்.

-புதுவை இரத்தினதுரை-






குண்டுபட்ட குடலோடு களத்தில் திலீபன்.

## தியாக வேள்வியின் போது பாசத்தோடு மக்களுடன் சில நிமிடம்.....



**"மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழீழத்தை, தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப்பெற்றுத் தரும். அதனை வானத்திலிருந்து அந்த அறுநூற்று ஐம்பது போராளிகளுடன் நானும் பார்த்து மகிழ்வேன். உண்மையான, உறுதியான இலட்சியம் எமது இலட்சியம். அந்த இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள் எனது இறுதி விருப்பமும் இது தான்."**



'ஓர் உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன்.
ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை;
எமது சுதந்திரம்; எமது கௌரவம்'.

-தியாகி திலீபன்-

> தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் எதிர்காலம் இருண்டதாகிவிடும். நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்காக பெரும் புரட்சிக்குத்தயாராக வேண்டும்
>
> -தியாகி திலீபன்-

**வெளியீடு:**
**அரசியல்துறை,**
**தமிழீழ விடுதலைப்புலிகள்**
**யாழ்மாவட்டம்.**



# மக்கள் புரட்சி வெடிக்கட்டும் !
# சுதந்திர தமிழீழம் மலரட்டும் !!

—தியாகி திலீபன்

ஹரிஹரனன் பிறின்டேர்ஸ், யாழ்ப்பாணம்.